# சிதம்பரம் நகராட்சி

**2026ஆம் ஆண்டு ஆவணி திங்கள் 4 ஆம் நாள் 21.08.2026ந்தேதி வெள்ளிகிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

**மன்றகூட்டப்பொருள்**

**1)** நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜுன் 2026 மற்றும் ஜுலை 2026 வரையிலான மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நோய்த்தடுப்பு நடவடிக்கைக்கான அன்றாடம் பயன்படுத்திவரும் நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங்பவுடர், பினாயில் உள்ளிட்ட கிருமிநாசினிகள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவைப்படும் தளவாட சாமான்களை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் வாங்கிக்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்: 1708/2024/எச்1**

**3**) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 100% சதவீத வாக்குப் பதிவினை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திடுமாறு மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்கள் அறிவுரை வழங்கியதன் பேரில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தப்பட்டது) 2022 பிரிவு 57 (7) ன் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திய வகையிலான செலவினம் ரூ. 2,64,084/- பொது நிதியிலிருந்து மேற்கொண்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண் : 1035/2026/எச்1 )**

**4)** திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 அமல்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் Efile No DMA-2026-SBM1-PAR நாள்:18.05.2026 ன்படி பொதுமக்களும், வணிக நிறுவனங்களும் அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நான்கு வகை கழிவுகளை விதிகளின்படி தரம் பிரிப்பதை கட்டாயமாக்கப்பட்டுள்ளதை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் விழிப்புணர்வு நோட்டீஸ்கள், போஸ்டர்கள் பேனர்கள் உள்ளிட்டவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலமாக வாங்கிக்கொள்ளவும்

அதற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண் : 1565/2026/எச்1 )**

**5)** சிதம்பரம் நகராட்சிக்குச் சொந்தமான புளிச்சமேட்டில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடை காமராஜர் மக்கள் நல சேவை அறக்கட்டளை, சீர்காழி என்ற நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நிலையில் மேற்படி அறக்கட்டளையின் நிர்வாகி தனக்கு உடல்நிலை சரியில்லை என்பதால், தொடர்ந்து எரிவாயு தகனமேடையினை பராமரிக்க இயலவில்லை எனத்தெரிவித்து, ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கோரியுள்ளார். அதே வேளையில் சிதம்பரம், ஹானஸ்ட் அறக்கட்டளை என்ற நிறுவனம் எரிவாயு தகனமேடையினை பராமரிப்பு செய்வதாக விருப்பம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார்கள். எனவே ஹானாஸ்ட் அறக்கட்டளைக்கு எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணியினை நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்** : 2220/2026/**எச்1**)

**6)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகளின் கழிப்பறை பராமரிக்கும் பணிக்கு திருமதி.கே. முத்துலெட்சுமி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ள பணி ஒப்பந்தக்காலம் 31.08.2026 –ல் முடிவடைகிறது. பள்ளிக் குழந்தைகளின் சுகாதார நலன் கருதி அதே விலை விகிதத்தில் 30.04.2027 முடிய நீட்டிப்பு செய்து கொள்ளவும் அதற்கான பட்டியலின் படியான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.4427/2017/எச்1)**

**7)** சிதம்பரம் நகராட்சியில் இயங்கிவரும் TN 31 AW 5126 குடிநீர் வாகனத்திற்கு தகுதி சான்று முடிவடைவதால் மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை அகற்றிடவும் மற்றும் இதர பழுது பராமரிப்புகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,30,000/-ஐ நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**8)** சிதம்பரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியினை மேற்கொள்ள M/s. KEYEM INFRA PROJECT PVT LTD என்ற நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு சிதம்பரம் நகரில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பாதாள சாக்கடை உந்து நிலையங்களில் உள்ள மோட்டார்கள் அவ்வப்போது

பழுதுகளை ஏற்பட்டு வருகிறது. இதனை பழுது அகற்றி பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இனி வரும் காலங்களில் அடிப்படை பணிகளான பாதாள சாக்கடை பணிகளை சுணக்கமின்றி நடைபெறவும் மேற்படி M/s. KEYEM INFRA PROJECT PVT LTD என்ற நிறுவனத்தின் மூலம் பாதாள சாக்கடை உந்து நிலையங்களில் இயங்கும் மோட்டார்களை பழுது அகற்றி பராமரிப்பு செய்ய மதிப்பீடு ரூ. 5,41,633/-க்கு பணி மேற்கொண்டதையும், மேலும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு** – 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அடிப்படை மற்றும் அத்தியாவசிய பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை உந்து நிலையங்களின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை அகற்றி பராமரிப்பு பணி மேற்கொண்டு தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**9)** அரசாணை எண்.28//MAWS(MAlll) துறை நாள்.27.01.2014ன் படி சிதம்பரம் நகரின் சுற்றுபுற சுகாதார நலன் கருதி புதிய பாதாளசாக்கடை திட்டம் ரூ.7562.23 லட்சம் செலவினத்தில் அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.05.2020 அன்று பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் சோதனை ஓட்டம் பூர்த்தி அடைந்து ஒப்பந்த நிபந்தனைகளின்படி கடந்த 01.07.2020 முதல் ஐந்தாண்டுகள்வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமே இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையில், தற்பொழுது கண்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்தின்படி 30.07.2025ன் தங்களது ஐந்து ஆண்டுகால பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் ஒப்பந்தகாலம் முடிவுற்றுள்ளதால், சிதம்பரம் நகராட்சி 01.08.2025 முதல் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் பொறுப்பு ஏற்றுகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை சிதம்பரம் நகராட்சி மூலம் மேற்கொள்ள ஓராண்டுக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.135.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, செலவினத்தை அரசின் ஏதாவது ஒரு திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்து, ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள அனுமதியும் வழங்கி உதவுமாறு 14.10.2025 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி ஓராண்டு பராமரிப்பு பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி திட்ட கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி M/s. KEYEM INFRA PROJECT PVT LTD., நிறுவனத்தாரிடமிருந்து 01.07.2026 முதல் 30.09.2026 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்கு பராமரிப்பு பணியினை காலநீட்டிப்பு செய்திட ரூ.34,00,000/-க்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை பாதாள சாக்கடை வைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஜூலை – 2026ம் மாதம் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**10)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண்.14-ல் கழிவறை வசதியின்றி பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். மேற்படி வார்டு பொதுமக்களிடமிருந்து கழிவறை அமைத்து தரக்கோரியும் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினரின் அறிவுரையின்படி மேற்படி வார்டில் நவீன நம்ம கழிவறை கட்டும் பணிக்கு ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**11)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 10, ஜவஹர் தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் செல்லாமல் உள்ளது. மேற்படி பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது என அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிதற்கிணங்க, மேற்படி தெருவில் சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/-ஐ எதேனும் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**12)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட தொடக்கப்பள்ளிகள் – 5, எண்ணிக்கை, நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் – 4 எண்ணிக்கை, உயர்நிலைப்பள்ளி 1 எண்ணிக்கை பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளின் பொது அறிவு திறனை மேம்படுத்திடும் வகையில் கீழ்கண்ட தினசரி நாளிதழ் வழுங்கப்பட்டதற்குண்டான தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நாளிதழ் பெயர் | நாளிதழ் வழுங்கப்பட்ட மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினமலர் | டிசம்பர் – 2025 | 24000 |
| 2 | | ஜனவரி – 2026 | 19200 |
| 3 | | பிப்ரவரி – 2026 | 24000 |
| | | **கூடுதல்** | **67200** |

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**13)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட நடராஜா கார்டனில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-26-ன்கீழ் ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி மேற்கொள்ளுமிடம் தாழ்வாக உள்ளதால் கூடுதலாக மண் நிரப்பி பணி மேற்கொள்ளவேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மேற்படி பூங்காவில் மண் நிரப்பி கூடுதலாக விளையாட்டு உபகரணங்கள், போர்வெல் மற்றும் செடிகள் வைத்து அழகுபடுத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**14)** சிதம்பரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்பட்ட ஞானபிரகாசம் குளம் தூர்வாரி மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது குளத்தின் கரையில் SS Handrails மேல் மரம் விழுந்து சேதம் ஏற்பட்டுள்ளது. இதனை சரிசெய்திட கோரி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, மேற்படி குளத்தில் சேதமடைந்துள்ள SS Handrails சீரமைப்பு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்

**15)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 08.07.2026 அன்று **வருவாய் நிதி 2026-2027**-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி 2026-27** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கனகசபை நகர் 10-வது குறுக்கு தெருவில் மழைநீர் தடுப்பு அமைக்கும் பணி | M/s.MAM Construction Chidambaram | 4,40,000/- | மதிப்பீட்டுவிலை யைவிட 14.25 % குறைவு | |
| | | திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம் | | -- | மதிப்பீட்டு விலை யைவிட 0.03% அதிகம் |
| | | திரு.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஒப்பந்ததாரர்,நாஞ்சலூர் | | -- | மதிப்பீட்டு விலை யைவிட 1.24 % அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 14.25 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.MAM Construction Chidambaram என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**16)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 08.07.2026 அன்று **வருவாய் நிதி 2026-27**-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி 2026-27** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கனகசபை நகரில் உள்ள நியாயவிலை கடையினை பராமரிப்பு செய்யும் பணி | M/s.MAM Construction Chidambaram | 1,80,000/- | மதிப்பீட்டு விலையை விட 10.39 % குறைவு | |
| | | திருமதி.கே. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர்,பனங்காடு | | -- | மதிப்பீட்டு விலையைவிட 0.37 % அதிகம் |
| | | திருமதி.கே.வடிவேல் ஒப்பந்ததாரர், சிதம்பரம் | | -- | மதிப்பீட்டு விலையை விட 0.15% அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 10.39 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.MAM Construction Chidambaram என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**17)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 24.07.2026 அன்று வருவாய் நிதி 2026-27–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | வருவாய் நிதி 2026-27 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட அம்மா உணவகத்தை பழுது அகற்றி பராமரிப்பு செய்யும் பணி | திரு.கே.வடிவேல், ஒப்பந்ததாரர், சிதம்பரம். | 4,50,000/- | மதிப்பீட்டுவிலை யைவிட 0.42 % குறைவு | |
| | | திருமதி.கே. முத்து லட்சுமி, ஒப்பந்ததாரர், சிதம்பரம். | | -- | மதிப்பீட்டு விலையை விட0.65 % அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.42 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.வடிவேல், ஒப்பந்ததாரர், சிதம்பரம், என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**1) மன்றம்அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.வடிவேல் ஒப்பந்ததாரர், சிதம்பரம் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**18)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 24.07.2026 அன்று வருவாய் நிதி 2026-27–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | வருவாய் நிதி 2026-27 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்திற்கு Vessels வாங்கி வழங்கும் பணி | திரு.கே.வடிவேல், ஒப்பந்ததாரர், சிதம்பரம். | 80,000/- | மதிப்பீட்டு விலை யைவிட 0.47 % குறைவு | |
| | | திருமதி.கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், சிதம்பரம். | | -- | மதிப்பீட்டு விலை யை விட 0.76 % அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.47% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.வடிவேல், ஒப்பந்ததாரர், சிதம்பரம், என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** 1) மன்றம்அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.வடிவேல் ஒப்பந்ததாரர், சிதம்பரம் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**19)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 கள்ளுகடை தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்காக, புதியதாக போர்வெல் அமைத்து தருமாறு அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதிற்கிணங்கவும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்படி வார்டில் புதியதாக போர்வெல் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.3,00,000/-ஐ நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்

**20)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 மடவிளாகம் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்காக, புதியதாக போர்வெல் அமைத்து தருமாறு அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதிற்கிணங்கவும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்படி வார்டில் புதியதாக போர்வெல் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.3,00,000/-ஐ நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்

**21)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண்08 16கால் மண்டபத்தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் செல்லாமல் உள்ளது. மேற்படி பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது என நகர்மன்ற உறுப்பினர் கோரிதற்கிணங்க, மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**22)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட ஓமகுளம் சி.தண்டேஸ்வரநல்லூர் உரக்கிடங்கு வளாகத்தில் அமைந்துள்ள தகனமேடைக்கு செல்லும் வழி மிகவும் சேதடைந்து உள்ளது. எனவே தகனமேடைக்கு செல்லும்போது சிரமம் ஏற்படுகிறது என வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரியதிற்கிணங்க, மேற்படி தகனமேடைக்கு செல்லும் வழியில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச செவினம் ரூ. 7,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**23)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 இரயில்வே லைன் கிழக்கில் அமைந்துள்ள வழி மிகவும் சேதடைந்து உள்ளது. எனவே அவ்வழியாக செல்லும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர் என நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரியதிற்கிணங்க, மேற்படி சாலைக்கு செல்லும் வழியில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச செவினம் ரூ. 5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**24)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 08.07.2026 அன்று **வருவாய் நிதி 2026-27**-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி 2026-27** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கீழவீதியில் புதிய மினிபவர் பம்பு அமைக்கும் பணி | M/s. Balan Electrical Works, No.10/2, Vellapirandhan street, Chidambaram | 2,30,000/- | மதிப்பீட்டு விலை யை விட 0.07% குறைவு | |
| | | M/s. RR & Co, Kurinjipadi. | | -- | மதிப்பீட்டு விலையை விட 2.81 % அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.07 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Balan Electrical Works, No.10/2, Vellapirandhan street, Chidambaram என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**25)** சிதம்பரம் நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ. 143.19 கோடி மதிப்பீட்டில் சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலை மற்றும் நகராட்சியினை சுற்றியுள்ள 10 கிராமங்களை ஒருங்கிணைத்து கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிவுற்று 12.03.2026 அன்று மாண்புமிகு முன்னால் தமிழக முதல்வர் அவர்களால்திறந்துவைக்கப்பட்டு, பொதுமக்கள்பயன்பாட்டில்உள்ளது.

மேற்படி உதவிக்கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராரிப்பு சிதம்பரம் அவர்களின் கடிதத்தில் சிதம்பரம் (நெ) க(ம) ப உட்கோட்டத்தை சார்ந்த விழுப்புரம் – பாண்டி – நாகப்பட்டினம் சாலை கி.மீ 110/2ல் (மா.நெ.215) இருந்து சிதம்பரம் – தாண்டவராயன்பேட்டை சோழகன்பேட்டை சாலை கி.மீ 0/8 வரை தில்லையம்மன் ஓடை கரைவழியாக இணைப்புச்சாலை அமைக்கும் பணி CRIDP 2025-26 திட்டத்தின்கீழ் பணி நடைபெற்றுவருகிறதுஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின்கீழ் பணிக்கு இடையூராக கி.மீ 0/2 (பள்ளிபடை தேவாலய அருகில்) மற்றும் கி.மீ 2/4 (பாலமன் ஓடை அருகில்) உள்ள பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைத்து தருமாறு கேட்டுக்கொண்டதிற்கிணங்க, மேற்படி திட்டதின்கீழ் இடையூராக கி.மீ 0/2 (பள்ளிபடைதேவாலய அருகில்) மற்றும் கி.மீ 2/4 (பாலமன்ஓடை அருகில்) உள்ள பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைத்திட ரூ. 35,31,100/-ஐ ஆகும் செலவினத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of the Work | Estimate Amount |
|---|---|---|
| 1 | Replacement of 400 mm dia CI LA class pipe pumping main from Thillaikalikoil MPS to STP (50 m) | 25,31,100.00 |
| 2 | Providing Water Supply pumping main pipe line at Railway feeder road (Palaman river culvert near) in Chidambaram Municipality | 10,00,000.00 |
| | **TOTAL** | **35,31,100.00** |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவீன தொகை ரூ.35,31,100/- நெடுஞ்சாலைத்துறையால் செலுத்தப்பட்டுள்ள தொகையில் ஈடு செய்துக்கொள்ளலாம்.

**26)** அ) இந்நகராட்சிப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பிரித்து சேகரிக்கப்படும் கழிவுகளில் விலைபோகாத பிளாஸ்டிக் உலர்கழிவுகள் ஏறக்குறைய நாளொன்றுக்கு 2.50 முதல் 3.00 டன் வரையிலும் சேகரிக்கப்பட்டு வளமீட்பு மையத்தில் சேமிக்கப்பட்டு அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு நகராட்சி வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. பிளாஸ்டிக் கழிவுகள் அதிகமாக சேகரிக்கப்படுவதாலும் சிமெண்ட் ஆலையில் பராமரிப்பிற்காக உலர் கழிவுகள் ஏற்கப்படாத காலகட்டத்தில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளால் RRC நிறைந்து விடுகிறது. அது போன்ற சமயங்களில் எதிர்பாராத தீ விபத்தினை தடுக்கும் வகையில் நகராட்சி லாரி மட்டுமல்லாமல், தனியார் வாகனம் பயன்படுத்தி அப்புறப்படுத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நேராய்வின் போது அறிவுரை வழங்கப்பட்டது. அதன் பேரில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தப்பட்டது) 2022 பிரிவு 57(7)ன் கீழ் தனியார் வாகனம் மூலம் உலர் கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பிய வகையிலான வாடகை செலவினம் ரூ.272000/-பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

ஆ) மேலும் தொடர்ந்து அதிகப்படியாக சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை அவசர காலகட்டங்களில் சிமெண்ட் ஆலைக்கு தனியார் வாகனம் மூலம் கொண்டு சேர்ப்பதற்கான தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

அ. மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ. மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்: 182/2017/எச்1)

K.R. [signature]

**சிதம்பரம்** **நகர்மன்ற தலைவர்**

**14.08.2026** **சிதம்பரம் நகராட்சி**